*செய்தி வெளியீடு*

*செ.வெ.எண்.*13 *நாள்:06.11.2017*

நீலகிரி மாவட்டம் உதகை ரோஜா பூங்கா அலுவலக கூட்டரங்கில் இன்று (06.11.2017) மாவட்ட தொழில் மையம், தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் சார்பில் நடைபெற்ற ‘‘தொழில் முனைவோர் விழிப்புணர்வு’’ முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட்.திவ்யா,இ.ஆ.ப.அவர்கள் தொடங்கி வைத்தார்.

நீலகிரி மாவட்டம் உதகை ரோஜா பூங்கா அலுவலக கூட்டரங்கில் இன்று (06.11.2017) மாவட்ட தொழில் மையம், தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் சார்பில் நடைபெற்ற ‘‘தொழில் முனைவோர் விழிப்புணர்வு’’ முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட்.திவ்யா,இ.ஆ.ப.அவர்கள் தொடங்கி வைத்து பேசியதாவது,

தமிழக அரசின் சிறுகுறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் வேலையில்லா பிரச்சனையை மட்டுப்படுத்தவும் சமூக மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கியோர் குறிப்பாக படித்த வேலையில்லா இளைஞர்கள் சுய வேலைவாய்ப்பு பெற வகுத்த திட்டம் ஆகும். தமிழ்நாட்டில் எங்குமில்லாத ஒரு சுற்றுப்புற சூழல் நம் நீலகிரி மாவட்டத்தில் அமைந்துள்ளது. இந்த மாவட்டத்திற்கு வருமானம் தரக்கூடிய புதிய தொழிலை இளைஞர்கள் தேர்ந்தெடுத்து தொழில் தொடங்க வேண்டும். நம் மாவட்டம் சுற்றுலா தலமாக உள்ளதால் இங்கு கிடைக்கக்கூடிய தாவரங்கள், பூக்கள், இலைகளை சேகரித்து புதியவகை ஆயில் தயாரித்து விற்பனைக்கு கொண்டு வரலாம். அதன் மூலம் வருமானத்தை அதிகரிக்க செய்து இன்றைய இளைஞர்கள் நாளைய தொழிலதிபர்களாக ஆகலாம். தொழில் தொடங்க உள்ள இளைஞர்களுக்கு மாவட்ட தொழில் மையத்தின் மூலம் முழு ஒத்துழைப்பு வழங்கப்படும். எனவே இந்த நல்ல வாய்ப்பினை பயன்படுத்தி இளைஞர்கள் தங்களுடைய வாழ்வாதாரத்தை உயர்த்தி கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்தார்.

மேலும் இந்த தொழில் முனைவோர் விழிப்புணர்வு முகாமில் கிராமிய சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனம் சார்பில் பயிற்சி பெற்ற 28 நபர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. பின்னர் புதிதாக தொழில் தொடங்குவதற்கு தலா ஒரு நபருக்கு 3 இலட்சம் வீதம் மூன்று நபர்களுக்கு 9 இலட்சத்திற்கான காசோலைக்கான ஆணைகளை மாவட்ட ஆட்சியர் அவர்கள் வழங்கினார்.

இம்முகாமில் மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு.அறிவழகன் மற்றும் வங்கி மேலாளர்கள், புதிய தொழில் முனைவோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்